# KEYNOTE SPEECH

## ஆய்வுகளினூடாக ஆசிரியர்களை வலுவூட்டல் (Empowering Teachers through Research)

எமது நாட்டில், பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஒக்ரோபர் மாதம் சிறப்பு வாய்ந்தது.'உலக சிறுவர்தினம்'மற்றும்'உலக ஆசிரியர்தினம்' என்பன பாடசாலைகளில் கொண்டாடப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, ஒக்ரோபர் மாதம் முழுவதும் வாசிப்பு மாதமாக பிடகடனப்படுத்தப்பட்டு, பாடசாலைகளில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆண்டுதோறும் ஆசிரியர் தினத்தன்று இலங்கை முழுவதும் கல்வித்துறையில் சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்கள், அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு கல்வி அமைச்சினால் "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப் படுகின்றது. முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களாகிய நாமும் எமது பணியை மீள்பார்வை செய்வதற்கும், எம்மை உணர்ந்து கொள்வதற்கும் ஆசிரியதினக்கொண்டாட்டங்கள் வாய்ப்பளிக்கின்றன. அந்தவகையில் பல சிறந்த ஆசிரியர்களிடம் கல்விகற்ற, கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவன் என்ற வகையிலும், ஆசிரியர்களுக்கு கற்பிக்கும் ஒரு பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளன் என்றரீதியிலும், ஒரு பெற்றோர் என்ற வகையிலும் மற்றும் சமூகத்தின் பொறுப்புள்ள பிரஜை என்றரீதியிலும் ஆசிரியர்களைப் பற்றி, அவர்களது பணிபற்றி, சமகாலத்திற்கு பொருத்தமான எனது கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

'சுதந்திரமாக கற்பித்தல் மற்றும் ஆசிரியர்களை வலுவூட்டல் (Teaching in Freedom, Empowering Teachers)' என்பது 2017 ஆம் ஆண்டின் UNESCO வின் ஆசிரியர்தின மகுட வாசகமாகும். இந்ததலைப்புடன் தொடர்புபட்டதாக பின்வரும் உப தலைப்புக்களில் உரையாற்ற விரும்புகின்றேன்.

### ஆசிரியர்களும் ஆசிரியத் தொழிலின் மகிமையும்

நாட்டில் அறியாமையையும், வறுமையையும் ஒழிக்கக்கூடிய கருவி உண்டு என்றால் அதுதான் கல்வி, அந்தக்கல்விச்செல்வத்தை மாணவர்களுக்கு வழங்கும் பெருமை பெற்றவர்கள் ஆசிரியர்கள். பெற்றோருக்கு அடுத்தபடியாக, தம்மிடம் பயிலும் மாணவர்களிடம் அன்புகாட்டி, அரவணைத்து வழிகாட்டுவதன் மூலம் சிறந்த கல்வியை வழங்கி, சமுதாய வளர்ச்சிக்கு உதவுபவர்கள் ஆசிரியர்கள் ஆவர்.

பிறபணிகளில் இல்லாதது, ஆசிரியர் பணியில் இருக்கின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்றுதான் சொல்கிறோம். மாதா, பிதா, டொக்டர், இஞ்சினியர் என்று சொல்வதில்லை. மனிதனை மனிதனாக உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளைச் சொல்வதுண்டு. மனிதனை முதன்மைப்படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது. மொத்தத்தில் இறந்த பின்னரும் மண்ணில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் வரிசையில் ஆசிரியர்களுக்கு முதலிடமுண்டு. கருவறையில் இருந்து வெளிவரும் ஒரு குழந்தைக்கு தாய் உலகை அடையாளம் காட்டுகின்றாள். அந்த உலகைப்புரிந்து பண்பட்டவனாய் வாழும் கலையை ஆசிரியர்கள் தான் அந்தக்குழந்தைக்கு செவ்வனே கற்றுக்கொடுத்து மனிதனாக மாற்றும் வேலையைச்செய்கின்றார்கள். ஓவ்வொரு நாட்டின் எதிர்காலத் தலைவிதியும் அந்த நாட்டின் வகுப்பறைகளில்தான் எழுதப்படுகின்றது. உலகம் இன்றுவரை பல்துறைசார் அறிஞர்களைப்பெற்றுக் கொண்டிருக்கின்றதென்றால், அதற்கு காரணம் சிறந்த ஆசிரியர்கள் தான்.

ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பதுதான் ஆசிரியரின் சிறப்புக்களில் மிகவும் பிரதானமாக உள்ளது. ஆசிரியர்களுடைய பணியின் மதிப்பு அளவிடப்பட முடியாதது. ஏனெனில், ஒரு மனிதனை மனிதனென்று அடையாளப் படுத்துவது, மிருகங்களைமீறிய சிறப்பு பண்புக்கூறுதான். அந்த சிறப்புப்பண்புக்கூறு சிறந்த கல்வியின் மூலமே கிடைக்கின்றது. அந்த சிறந்த கல்வியை அளிக்கும் மாபெரும் பணி ஆசிரியர்களை சார்ந்துள்ளது. ஏனெனில் ஆசிரியர்கள் உருவாக்கும் மாணவச்சமூகமானது, ஒரு நாட்டின் எதிர்காலத்தை மட்டுமல்ல, இந்த உலகின் எதிர்காலத்தையே தீர்மானிக்கின்றது. அனைத்து மக்களின் நல்வாழ்வும் அந்த சமூகத்தின் கைகளில்தான் உள்ளது. எனவே இந்த இடத்தில் ஆசிரியர் என்பவரின் பணியானது அனைத்தையும்விட உயர்ந்து நிற்கின்றது. “ எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு” என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள்தான். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவசமுதாயத்தின் பங்கு எப்படியிருக்கவேண்டும் என்று ஒரு தெளிவை ஆசிரியர்கள்தான் கற்றுக்கொடுக்கின்றார்கள்.

ஏனைய தொழில்களைப்போன்று ஆசிரியப்பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரத்திற்கான பணி அல்ல. தனது வாழ்வையே ஆதாரமாக்கும்பணி. அந்தப்பணியில் வேண்டுமானால், வாழ்வை நகர்த்துவற்கான ஊதியம் கிடைக்கலாம். ஆனால் அந்த ஊதியத்திற்கான அந்தப்பணி அல்ல என்பதுதான் ஒரு சிறந்த ஆசிரியரின் தத்துவம். ஆசிரியர் பணி என்பது உயிரோட்டமானபணி. ஆய்வுரீதியான பணி, உளவியல்ரீதியானபணி, சேவைரீதியானபணி, அர்ப்பணிப்புள்ளபணி, கால-நேரமற்ற பணி. ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டுமே ஆசிரியராக இருப்பதில்லை. இருக்கவும்

முடியாது. அவர் தன் வாழ்வின் பெரும்பகுதி நேரங்கள் ஆசிரியராகவே இருக்கிறார். அவரின் சேவைக்கு எல்லை கிடையாது. மனித வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தி, அதற்கு அர்த்தத்தை கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கு உள்ளது. உலகில் உள்ள தொழில்களிலேயே, ஆசிரியர் பணியே அதிக திறமைகள் தேவைப்படும் பணி என்று சொல்லுமளவிற்கு அதன் பொறுப்புக்கள் அதிகம்.

**சுதந்திரமாக கற்பித்தல் (Teaching in Freedom)**

சுதந்திரமாக கற்பித்தல் என்றால் என்ன? தம்மிடம் கல்விகற்கின்ற அனைத்து கற்போர்களுக்கும் வினைத்திறனான, தனித்துவமான மற்றும் சமத்துவமான கல்வியை வழங்குவதற்காக மிகப்பொருத்தமான கற்பித்தல் முறைகளையும் (teaching methods), அணுகுமுறைகளையும் (approaches) தெரிவுசெய்யும் சுதந்திரமே அதுவாகும். மேலும் நாட்டில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும், நிலையில்லாத உறுதியற்ற சூழ்நிலைகளிலும் ஆசிரியர்கள் பாதுகாப்பாக கற்பிக்ககூடியதாக இருக்கவேண்டும் என்பதே சுதந்திரமாக கற்பித்தல் என்பதன் அர்த்தமாகும்.

முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு கல்விசார் சுதந்திரம் (Academic Freedom) என்பது மிக அவசியமானது. ஆனால் தற்காலத்தில் பெரும்பாலான நாடுகளில் ஆசிரியர்களின் கல்விசார் சுதந்திரம் என்பது அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இலங்கையிலும் ஆசிரியர்களின் கல்விசார் சுதந்திரம் பல்வேறு சவால்களால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

**தற்காலத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்**

தற்காலத்தில் உலகளாவியரீதியில் ஆசிரியர்கள் பல்வேறு சவால்களை தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றனர். ஆசிரியர் பற்றாக்குறை (Staff shortage), குறைந்தளவிலான பயிற்சி (Poor training) மற்றும் தாழ்நிலை அங்கீகாரம் (Low status) என்பன அவற்றுள் முக்கியமானவை என UNESCO இனங்கண்டுள்ளது. இலங்கையிலும் ஆசிரியர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது. வகுப்பறை மட்டம், பாடசாலை மட்டம் மற்றும் சமூக மட்டத்திலான சவால்களை அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

வகுப்பறைமட்டத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களாக கலைத்திட்ட வரையறை, மாணவர் பல்வகைமை, வளப்பற்றாக்குறை, விடயதானம் தொடர்பான அறிவு (Subject content knowledge) மற்றும் கற்பித்தலியல் தொடர்பான அறிவுக் (Pedagogical

content knowledge) குறைபாடு. தொழில்நுட்ப நிபுணத்துவமின்மை மற்றும் இடைவினையுறவுப் பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன.

பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களாக, நிர்வாக மட்டத்திலான கெடுபிடிகள், கற்பித்தல் நேரங்கள் விரயமாதல், ஆசிரியர்களிடையே சமத்துவமான அங்கீகாரம் இல்லாமை, சக ஆசிரியர்களால் ஏற்படும் நெருக்கீடுகள் என்பன காணப்படுகின்றன. சமூக மட்டத்திலும் ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கீடுகளுக்கு முகங்கொடுக்கின்றனர். ஆசிரியர்களின் பணிக்குரிய அங்கீகாரம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தால் வழங்கப்படுவதில்லை. மாணவர்களின் ஆசிரியர்களை மதிக்கும்திறன் குறைவடைந்து செல்கின்றது. அரசியலும், சமூகமும் ஆசிரியர் தொழிலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, நேர்மையும் அர்ப்பணிப்பும் கொண்ட ஆசிரியர்கள் சுதந்திரமாக செயற்படுவதை முடக்கி வருகின்றன. இலங்கையில் ஆசிரியப்பணிக்குரிய வேதனம் போதியதாக காணப்படவில்லை. மேலும் நிர்வாகரீதியான நெருக்கீடுகளினாலும், முறையற்ற இடமாற்றங்களாலும் அதீத வேலைச்சுமையாலும் ஆசிரியர்கள் பல்வேறு உடல், உளப்பாதிப்புக்களிற்கு உள்ளாகின்றனர்.

## ஆசிரியர்களை வலுவூட்டல் (Empowering Teachers)

உலகளாவியரீதியில் 'ஆசிரியர்களை வலுவூட்டல்' என்பது தொடர்பாக தொடர்ச்சியாக யுனஸ்கோவினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. 'ஆசிரியர்களை வலுவூட்டல் மற்றும் பேண்தகு சமூகங்களை கட்டியெழுப்பல் (Empowering Teachers, Building Sustainable Societies)' என்பது 2015 ஆம் ஆண்டின் UNESCO வின் ஆசிரியர்தின மகுட வாசகமாகும். அதேபோல 'ஆசிரியர்களுக்கு பெறுமதியளித்தல் மற்றும் அவர்களின் அந்தஸ்சை உயர்த்தல் (Valuing Teachers, Improving their status)' என்பது 2016 ஆம் ஆண்டின் ஆசிரியர்தின மகுட வாசகமாகும். இதிலிருந்து, உலகளாவியரீதியில் 'ஆசிரியர்களை வலுவூட்டல்' என்பது தொடர்பாக தொடர்ச்சியாக யுனஸ்கோவினால் வலியுறுத்தப்பட்டு வருவதை எம்மால் உணரக்கூடியதாக உள்ளது. முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள், நிபுணத்துவ அறிவு, விசேட திறன்கள் மற்றும் கற்பித்தல் தேர்ச்சிகள் என்பவற்றை கொண்டிருக்க வேண்டும்.

## தற்காலத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்

தற்காலத்தில் ஆசிரியர்கள் முன்சேவைப் (Pre service training) பயிற்சியினூடாகவும் சேவைக்காலப் பயிற்கிகளினூடாகவும் (In-service trainings)

வலுவூட்டப்படுகிறார்கள். இலங்கையில் ஆசிரிய முன்சேவைப்பயிற்சிகளை வழங்குவதற்காக இருபது தேசிய கல்வியியல் கல்லூரிகள் (National College of Education) அமைக்கப்பட்டுள்ளன. இவை தேசிய கற்பித்தல் சான்றிதழை (National Diploma in Teaching) வழங்குகின்றன.

சேவைக்காலப் பயிற்கிகளினை, கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித் திணைக்களங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள், ஆசிரிய கலாசாலைகள் (Teachers' training colleges), ஆசிரிய மத்திய நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலுள்ள கல்விப்பீடங்களும் கல்வீயில் துறைகளும் ஆசிரியர்களுக்கு வழங்குகின்றன. தற்போது ஆசிரியர் சேவையின் தடைதாண்டலுக்கு, ஆசிரிய வாண்மைவிருத்தியுடன் தொடர்புடைய குறிப்பிட்ட மொடுல்களை பூர்த்திசெய்தல் கட்டாயமானதாகும். பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள் (School Based Teacher Development – SBTD) பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்றன.

## ஆசிரியர்களும் கல்வி ஆராய்ச்சிகளும்

ஆசிரியர்கள் தமது பணியுடன் தொடர்புபட்டவகையில் கல்வி ஆய்வுகளில் ஈடுபடவேண்டுமென தற்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தல் மற்றும் நிர்வாக மேம்பாட்டுக்கு உதவும் வகையில் செயல்நிலை ஆய்வுகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஆளணியினர் ஈடுபடவேண்டும் என தற்கால கல்வி முறைமை எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைப் பாடசாலைக் கல்வித்துறையின் ஆய்வுகள் தினம், இவ்வாண்டு (2017) முதன் முதலாக மார்ச் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இவ்வருட எண்ணக்கருவானது "கல்வித்துறையின் சிறந்த அடைவுகளை எட்டுவதற்கான ஆய்வுகள்" (Research for Achieving Excellence in Education) என்பதாகும். கல்வித்துறையின் அளவுரீதியானதும் (Quantitative) பண்புரீதியானதுமான (Qualitative) அபிவிருத்திக்கு ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானமெடுத்தல் அவசியமானதாகும். ஆய்வுகள் தினத்தன்று அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆய்வில் ஈடுபடுத்துவதற்கே எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பரிசோதனை ஆய்வுகள் (Experimental Research) மற்றும் சமூகம்சார் ஆய்வுகளில் (Social Research) ஈடுபட்டு, ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு அவர்களது வாழ்க்கையை வடிவமைத்துக்கொள்ள வேண்டும்.

## அறிவார்ந்த எதிர்காலத்தை நோக்கி-மாணவர் ஆராய்ச்சியாளர் செயற்றிட்டம் - 'ஆராய்ச்சி வாரம்-2023' – (ஆகஸ்ட் -7 முதல் 11 வரை)

ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை எடுக்கும் கலாச்சாரம் ஒன்றை பாடசாலை முறைமைக்குள் உருவாக்குவதன் மூலமாக அறிவார்ந்த எதிர்காலமொன்றுக்கு நாட்டின் பாடசாலை சிறார்களை முன்னிலைப்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளையினூடாக மாணவர் ஆராய்ச்சியாளர் செயற்றிட்டம் - 'ஆராய்ச்சி வாரம்-2023'ஆகஸ்ட் - 7 முதல் 11 வரை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வாரத்தில் மாணவர்களை ஆராய்ச்சிசார்ந்த பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஆரம்பப்பிரிவு (தரம் -1 தொடக்கம் தரம்-5 வரை) – மாணவர் அவதானிப்பு நாட்குறிப்பேடு
- கனிஸ்ட இடைநிலைப்பிரிவு (தரம் - 6 தொடக்கம் தரம் - 9 வரை) – மாணவர் கருத்து ஜர்னல்
- சிரேஸ்ட இடைநிலைப்பிரிவு (தரம் - 10 தொடக்கம் தரம் - 13 வரை) – மாணவர் கருத்து ஜர்னல்

### ஆய்வு தொடர்பாக ஆசிரியர்கள் பாடசாலையில் முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகள்

1. அன்றாட கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு செயல்நிலை ஆய்வுக்கான (Action Research) பிரவேசத்தினை அறிமுகம் செய்தல்.
2. பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பாக பிரதிபலிப்பு ஜேர்னல் ( Reflective Journal) ஒன்றினைப் பேணி அவற்றினை ஆசிரியர்களுக்கான கூட்டங்களில் முன்வைக்க வேண்டும்.
3. வகுப்பு மட்டத்தில் ஆய்வு முகாம்களை நடாத்தி 6 - 9 வரையான தரங்களில் கல்விகற்கும் மாணவர்களிற்கு சிறு கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கி அவர்களது கண்டுபிடித்தல்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.
4. மாணவர்களினது தொழில் முயற்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான திறமைகளை விருத்தி செய்வதற்குச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

### இலங்கையில் ஆசிரியர்களை வலுவூட்டலிலுள்ள குறைபாடுகள்

- தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் கணிசமான எண்ணிக்கையான ஆசிரியர்கள் இன்னும் பயிற்றப்படாது பாடசாலைகளில் கற்பித்துக் கொண்டிருக்கின்றனர்.
- ஆசிரியசேவை பிரமாணக்குறிப்பிற்கு முரணாக, அடிப்படை கல்வித்தகைமையற்றவர்கள் தொடர்ச்சியாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படுகின்றனர்.
- வலயமட்டத்தில் சேவைக்காலப் பயிற்சிகள் வழங்குவதற்கான ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடரீதியான உதவிக்கல்விப்பணிப்பாளர்களது பற்றாக்குறை பல கல்விவலயங்களில் நிகழ்கின்றது.
- மாகாணமட்டத்தில் மற்றும் வலயமட்டத்தில் ஒழுங்கமைக்கப்படும் சில சேவைக்காலப் பயிற்சிகள் வினைத்திறனற்றவையாக நடாத்தப்படுகின்றது.
- மாறிவரும் காலத்திற்கேற்ப ஆசிரிய கல்வி நிறுவனங்கள் தமது கலைத்திட்டங்களை மாற்றியமைக்காமை
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள் எதிர்பார்த்த அளவில் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படாமை.
- அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஆளணியினர் தமது ஆசிரிய வாண்மைவிருத்திக்கற்கைநெறிகளில் மேற்கொள்ளும் ஆய்வுகளின் முடிவுகள் சமூகத்தை சென்றடைவதில்லை
- பாடசாலைகளில் நடைபெறும், ஆசிரியர்களின் உள்வாரி மற்றும் வெளிவாரி மதிப்பீடுகள் ஆசிரியர்களின் பணிமேம்பாட்டுக்கு உதவும்தன்மை குறைவாகக் காணப்படுகின்றது.

**எதிர்காலத்தில் ஆசிரியர்களை சிறந்த முறையில் வலுவூட்டுவதற்கான சிபார்சுகள்**

1. பின்வருவனவற்றுள் இருபத்தியோராம் நூற்றாண்டு திறன்கள் (21st Century Skills) தொடர்பாக எல்லா ஆசிரியர்களும் வலுவூட்டப்பட வேண்டும்.
   - கற்றல் மற்றும் புதுமைத்திறன்கள் (Learning and innovation skills)
   - டிஜிற்றல் எழுத்தறிவுத்திறன்கள் (Digital literacy skills)
   - தொழில் மற்றும் வாழ்க்கைத்திறன்கள் (Career and life skills)
2. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள், ஆசிரியர்களின் பங்களிப்புடன், சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.
3. ஆசிரியர்கள் தமது கற்பித்தல் தொடர்பாக சகபாடி மற்றும் சுயமதிப்பீட்டை அடிக்கடி மேற்கொள்ள வேண்டும்.

4. கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 6/2013 இற்கு அமைவாக தற்போது பாடசாலைகளில் ''பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்'' முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வேலைத்திட்டங்களில் மாணவர்களின் உளநலன் மேம்பாடு மட்டுமன்றி ஆசிரியர்களின் உளநலன் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன்மூலம் ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் உச்ச அளவு வினைத்திறனைப்பெற்றுக்கொள்ள முடியும்.
5. ஆசிரியர்கள் பொருளாதாரரீதியாக வலுவூட்டப்பட வேண்டும். வாழ்க்கைச்செலவு அதிகரிப்புஏற்ப அவர்களது வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும்.

முடிவுரை

இலங்கையில் நடைபெற்ற நீண்ட உள்நாட்டு யுத்தத்தில் அதிகளவில் பாதிப்பிற்குள்ளானது எமது வடக்கு மாகாணமாகும். இதனால் எமது பாரம்பரியச்சொத்தான கல்வியில் பல பின்னடைவுகளைச்சந்திக்க நேர்ந்துள்ளது. அண்மைக்கால பொதுப்பரீட்சை அடைவு வீழ்ச்சிகள் அதற்கு கட்டியம் கூறுவனவாக அமைந்துள்ளன. இந்த யதார்த்த நிலையை கல்விசார் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டு காலத்தைப்போக்காது, வடமாகாண கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளில் ஒற்றுமையாக ஈடுபடுவோம். ஆசிரியர்கள் தமது பணியைச்சுதந்திரமாகச் செய்ய வழிசமைப்போம். காலமாற்றத்திற்கு பொருத்தமாக ஆசிரியர்களை வலுவூட்டுவோம்.

உசாத்துணைகள்

1. நித்திலவர்ணன்.ஆ(2016), யுத்தத்திற்கு பின்னரான சூழலில் வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளில் ஏற்படும் தளம்பல்கள், அதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள், ஆசிரியர் மகாநாட்டுப்பேருரை, வடமராட்சிக்கல்விவலயம், 30-04-2016.
2. நித்திலவர்ணன்.ஆ(2014), வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும், அவற்றை எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக்கண்டறிதலும், யா/கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் நினைவுப்பேருரை, 27-09-2014.
3. UNESCO (2017) World Teachers' Day-5th October 2017, Retrieved from https://en.unesco.org/themes/teachers/world-teachers-day on 23-10-2017.

4. சின்னத்தம்பி.மா.(2016), ஆசிரியர்களது எதிர்கால அறைகூவல்கள், ஆசிரியர் மகாநாட்டுப்பேருரை, வடமராட்சிக்கல்விவலயம், 29-04-2016.

5. கல்வி அமைச்சு(2017),இலங்கைப்பாடசாலைக்கல்வித்துறையின் ஆய்வுகள் தினம் (Research Day) - மார்ச் - 15, இசுறுபாய, பத்தரமுல்ல.

6. கல்வி அமைச்சு(2023),அறிவார்ந்த எதிர்காலத்தை நோக்கி-மாணவர் ஆராய்ச்சியாளர் செயற்றிட்டம் - 'ஆராய்ச்சி வாரம்-2023' – (ஆகஸ்ட் -7 முதல் 11 வரை) இசுறுபாய, பத்தரமுல்ல.

## PROGRAMME OF THE INAUGURATION CEREMONY

| Time | Programme |
|---|---|
| 9.00 am – 9.05 am | Arrival of Guests & National Anthem |
| 9:05 am – 9.10 am | Lightning the Lamp |
| 9:10 am – 9.15 am | Welcome address |
| 9:15 am – 9.25 am | Chair Person's Address Mrs.Arunthathe Muhunthan, Manager PDCT |
| 9:20 am – 9.30 am | Address by the Chief Guest<br>Dr.(Mrs) J. Rasanayagam, Head, Dept. of Education, University of Jaffna |
| 9:30 am – 9.40 am | Address by Special Guest<br>Mr. K. Sathiyapalan, Director of Education, Vadamarachy |
| 9:40 am – 9.50 am | Address by Special Guest<br>Dr. S. Paramanantham , President, JNCOE |
| 9.50 am – 10.00 am | Co-Editor 's Address Dr. B.Thanapalan , Senior Lecturer, JNCOE & Introduction to Keynote Speaker |
| 10.00 am – 10.30 am | Keynote Address Dr. A. Niththilavarnan , Senior lecturer, Dept. of Education, University of Jaffna |
| 10.30 am – 10.35 am | Vote of Thanks |